5th May 1962]

செய்யப்பட்டது. ஆகவே கல்லூரிக்கு என்று தனியாக கட்டிடம் கட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது. இப்பொழுது காலேஜ் இருக்கும் கட்டிடத்திலேயே ஹாஸ்டலை வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI T. KARCHA GOWDER : கனம் சபாநாயகர் அவர்களே, உதகை கல்லூரியில் பெண்களுக்கு என்று ஹாஸ்டல் இல்லாத காரணத்தால் பெண்கள் அந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்க முடியாமல் இருப்பதால் கனம் அமைச்சர் அவர்கள், இப்பொழுது கட்டக்கூடிய கட்டிடத்தில் பெண்களுக்கு என்று தனியாக இட வசதி செய்து கொடுக்கும் அளவில் கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா? அப்படிக் கட்டி பெண்களுக்கு தனியாக ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போதிய பெண்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க முன் வந்தால் அவர்களுக்கு தனியாக யாக வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். தனியாக ஹாஸ்டலும் அமைக்கப்படும்.

SRI J. MATHA GOWDER : இப்பொழுதிருக்கும் கல்லூரிக் கட்டிடத்தை ஹாஸ்டலாக மாற்றவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், கல்லூரிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டால்தான் ஹாஸ்டலுக்கு விமோசனம் ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, கல்லூரிக்கான கட்டட வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? கல்லூரி கட்டட வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்? 9-00 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவது பற்றி தனியாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. அதில் அனாவசியமான தாமதம் ஒன்றும் இருக்காது.

Taxation by Municipalities

* 36 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint a committee to examine the rationale of taxation by the municipalities and to suggest proposals for augmenting their revenues; and

(*b*) if so, the details thereon?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. KALYANASUNDARAM : பல நகரங்களில் வீட்டு வரி விதிப்பது சம்பந்தமாக ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. குறிப்பாக, ஏழை எளியவர்கள் வசிக்கக் கூடிய வீட்டுக்கு அதிக வரி போடப்பட்டிருக்கிறது என்ற புகார் அரசாங்கத்திற்கு

[5th May 1962

வந்திருக்கிறதா ? அப்படிப்பட்ட புகார் வராமலிருக்க, இப்படி ஒரு கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருப்பதாக அரசாங்கம் கருதவில்லையா ?

THE HON. SRI S. M. A. MAJID : இப்படிப் புகார்கள் இதுவரை வந்ததாகத் தெரியவில்லை.

SRI SAW. GANESAN : இம்மாதிரி முனிசிபாலிடிகளிலே வரி விதிக்கிறபோது, தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்றோ, ஒரே வீட்டை இரு கூறுகப் பிரித்து, இரண்டு விதமாக வரிகள் விதிக்கப்பட்டு, அதனாலே பலர் கஷ்டப்படுவது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI S. M. ABDUL MAJID : அப்படி அரசாங் கத்தின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை.

Salem Revenue District (Bifurcation of)

* 37 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state the stage at which the matter for bifurcating the revenue district of Salem into northern and southern parts stands now?

THE HON. SRI V. RAMAIAH : The Revenue District of Salem has already been divided into North and South Salem Development Districts. The whole question of bifurcation of heavy Revenue Districts including Salem District is under consideration.

SRI R. S. VEERAPPA CHETTIAR : இது எப்பொழுது முடிக்கப்படும் என்று அறியலாமா ?

THE HON. SRI V. RAMAIAH : அதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் இப்பொழுது சொன்னேன்.

SRI M. KALYANASUNDARAM : இந்த மாவட்டங்களைப் பிரிக்கும் பிரச்சினையானது அரசாங்கத்தின் ஆலோசனையில் எத் தனை ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது ? இறுதியான முடிவு எடுக்க இன்னும் எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் ?

THE HON. SRI V. RAMAIAH : அபிவிருத்தி வேலைகள் அதிக மாகத் தொடங்கியவுடன், கலெக்டர்களுடைய வேலைப் பளு அதிக மாகப் போய்க்கொண்டே இருக்கிறது. அதைச் சரியாக நல்ல முறையில் கவனித்து, அந்த வேலைப் பளுவைக் குறைப்பதோடல் லாமல், ஜில்லாவில் இருக்கக்கூடிய பொது மக்களுக்கு வேண்டிய காரியங்கள் சீக்கிரமாக நடப்பதற்கு வேண்டி, ஜில்லாக்களைப் பிரிக்கும் விஷயம், அபிவிருத்தி வேலைகள் தொடங்கிய காலத்தி லிருந்து பரிசீலனையில் இருந்து வருகிறது. அதற்குப் பல வழி களை நாம் கடைப்பிடித்து, சமீபத்திலே அந்த வேலைப் பளுவைக் குறைப்பதற்கு 'டெவலப்மென்ட் டிஸ்ட்ரிக்ட்' என்ற முறையில் இரண்டாகப் பிரித்திருக்கிறோம். அதோடல்லாமல், கலெக்டர் களுக்கு இருக்கும் வேலைப் பளுவைக் குறைக்கக்கூடிய முறையில், இந்தச் சட்ட மன்றம் இயற்றியிருக்கிற சட்ட அடிப்படையில்